
# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com




## GCN TV மூலமாக பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள் 170க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பரவுகிறது, பல்வேறு சாட்சிகள் நிரம்பி வழிகின்றன

ஏறக்குறைய 170க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள மிகவும் திரளான GCN நேயர்கள் பரிசுத்த சுவிசேஷத்தினாலும், வல்லமையான கிரியைகளினாலும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றனர். தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் பிரசங்கங்கள், அவருடைய வல்லமையான ஊழியங்கள் மற்றும் மான்மின் தலைமை சபையை சார்ந்த கலைநிகழ்ச்சி குழுவினர் வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள் என பல்வேறு நிகழ்ச்சிகளை GCN (Global Christian Network - www.gcntv.org) தயாரித்து ஒளிபரப்புகின்றது.

வட அமெரிக்காவில், குறிப்பாக அமெரிக்காவில் உள்ள நியூயார்க் பப்ளிக் தொலைக்காட்சி அலைவரிசை எண் 17, க்ளோரி ஸ்டார் செயற்கைக்கோள், ரோக்கு (ROKU) மற்றும் அமேசான் பையர் தொலைக்காட்சியில் 24 மணிநேரம் GCN ஒளிபரப்பப்படுகிறது. ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா மற்றும் ஓசியானியாவில் GCNனானது NSS6, ABS2 மற்றும் Asiasat 5 போன்ற செயற்கைக்கோள் வழியாக ஒளிபரப்பப்படுகிறது. GCN 40 ஒளிபரப்பு நிறுவனங்களுடன் இணைந்து பொதுநல, செயற்கைக்கோள் மற்றும் கேபிள் தொலைக்காட்சி மூலமாக நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகிறது. GCN தனது நிகழ்ச்சிகளை அநேக தொலைக்காட்சிகளுக்கும் வழங்குகிறது: ரஷ்ய மொழி பேசும் நாடுகளில் உள்ள TBN ரஷ்யா மற்றும் CNL TV; ஐரோப்பாவில் உள்ள ஹோலி காட் TV; லண்டனில் உள்ள லவ் வேர்ல்ட் TV; பாகிஸ்தானில் உள்ள ஐசக் TV; லத்தீன் அமெரிக்காவில் உள்ள முதன்மையான கிறிஸ்தவ ஒளிபரப்பு நிலையமான எண்லஸ்; ஹாண்டுராஸில் உள்ள JBN, எல் சல்வடோரில் உள்ள CN17 மற்றும் கோஸ்டோ ரிகாவில் உள்ள கிறிஸ்டோ விஷன் போன்றவையாகும்.

அமெரிக்காவில் உள்ள நியூ ஜெர்ஸியை சார்ந்த சகோதரி கிறிஸ்டினா பெரேஸ் சொன்னது, “நான் GCN–னை அலைவரிசை 17ல் பார்க்கிறேன். அறிவர். ஜேராக் லீ அவர்களின் பிரசங்கங்களினால் என் இதயத்தில் சமாதானத்தையும், புரிந்துகொள்ளுதலையும் பெற்றுக்கொண்டேன்.” அமெரிக்காவில் உள்ள சிக்காகோவில் வசிக்கும் சகோதரி சமிரா டோபிக்கோ க்ளோரி ஸ்டார் என்ற செயற்கைக்கோள் மூலமாக GCNனை பார்க்கிறாள். ஒவ்வொரு நாளும் அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்கள் எப்பொழுது வருமென்று தான் காத்திருப்பதாகச் சொன்னாள். அநேக மக்கள் ஜீவனுள்ள வார்த்தைக்காக ஏங்குகின்றனர், அப்படிப்பட்ட பிரசங்கத்திற்காக தங்களது நன்றிநிறைந்த உள்ளத்தையும் வெளிப்படுத்துகின்றனர்.

எல் சல்வடோரில் இருக்கும் சகோதரர் கரோலஸ் கோசேஸ் சொல்லியது, “நான் GCNஐ எண்லஸ் தொலைக்காட்சியில் பார்க்கிறேன். அதன் முதல்தரமான நிகழ்ச்சிகளை கண்டு ஆச்சரியமடைகிறேன். வல்லமை மற்றும் தெய்வபயம் என் இதயத்தின் ஆழத்தை தொட்டது.” சகோதரர் கரோலஸ் சர்மியெண்டோ, “அறிவர். லீ அவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கை என் வாழ்க்கையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது” என்றார். சகோதரி விர்ஜினியா டியாஸ் எண்லஸில் ஒளிபரப்பாகும் GCN நிகழ்ச்சிகள் மூலமாக அதிக கிருபையை பெற்றுக்கொண்டாள். அவள் பின்பு கொலோம்–பியா மான்மின் சபைக்கு வழிநடத்தப்பட்டாள். அவளுடைய மகளுக்காக அறிவர். லீ அவர்களின் ஜெபத்தை பெற்ற பொழுது மகள் இடுப்பு வியாதியிலிருந்து சுகமானாள்.

உக்ரைனில் உள்ள சகோதரர் அண்டொன் பெகூஸின் குடும்பமானது TBN ரஷ்யாவில் GCN நிகழ்ச்சிகளை பார்த்த பிறகு அதன் ரசிகர்களாகிவிட்டனர். அவர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் பிரசங்கங்கள் மூலமாக தேவனுடைய அன்பையும் சித்தத்தையும் உணர்ந்து, அதைப் பின்பற்ற தொடங்கியது முதற்கொண்டு தன் தொழிலில் பண ஆசீர்வாதத்தைப் பெற்று வருவதாகச் சொன்னார். கூடுதலாக, ரஷ்ய மொழி பேசும் கிறிஸ்தவர்களுக்கான ஒரு முன்னணி இணைய வலைத்தளமான இன்விக்டரியின் (www.invictory.org) பல பார்வை–யாளர்கள் மின்னஞ்சல் மூலமாக அறிவர். லீ அவர்களிடம் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி சுகத்தையும் பதிலையும் பெற்றுக்கொள்கின்றனர்.

இந்தியாவில் நிறுவப்பட்ட முதல் கிறிஸ்தவ தொலைக்காட்சி நிலையமான குட்நியூஸ் TV GCNனின் துதி ஆராதனை நிகழ்ச்சிகளை இந்தியா மற்றும் மத்திய கிழக்கில் உள்ள நாடுகளுக்கும் ஆப்பிரிக்காவிற்கும் ஒளிபரப்புகிறது. இந்தி அலைவரிசையான சுபசண்தீஸ் TV அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்களை கேபிள் செயற்கைக்கோள் வழியாக ஒளிபரப்புகிறது. சொந்த செயற்கைக்கோள் நிலையத்தை வைத்திருக்கும் ஏர்டல் TV மூலமாக ஏப்ரல் 2017லிருந்து GCN ஒளிபரப்பப்படுகிறது. அநேக நேயர்கள் ஆர்வமான விமர்சனங்களை அனுப்பி வருகின்றனர். பிரசங்கத்திற்குப் பிறகு ஒளிபரப்பாகும் அறிவர். லீ அவர்களின் ஜெபத்தின்மூலம் அநேகர் தங்கள் வியாதிகளிலிருந்து சுகத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். சகோதரி கல்பனா சமாயா மனஅழுத்தத்திலிருந்து சுகமடைந்தார்; சகோதரி தாராள் தூக்கமின்மையிலிருந்தும், சகோதரி சோபா சேகர் காது வலியிலிருந்தும் சுகமடைந்தனர்.

அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்களும், பல்வேறு GCN நிகழ்ச்சிகளும் ஒரு நாளைக்கு 12 மணிநேரமாக இந்தியாவிலுள்ள அருள்வாக்கு GCNனில் ஒளிபரப்பாகிறது. தொலைக்காட்சி தலைவர் ஆபிரகாம் வின்சண்ட், “அறிவர். ஜேராக் லீ அவர்களின் வியாதியஸ்தர்களுக்கான ஜெபம்மூலமாக அநேக நேயர்கள் பல்வேறு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டனர். அவர்களில் அநேகர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலையடைந்தனர்; புற்றுநோய், நுரையீரல் நோய் மற்றும் வயிறு சம்பந்தப்பட்ட நோய்களிலிருந்தும் சுகமடைந்துள்ளார்கள். மலட்டுத்தன்மையால் அவதிப்பட்டு வந்தவர்களும் குழந்தையை பெற்றெடுத்துள்ளார்கள்” என்று கூறினார்.

# பரலோக ராஜ்யம் பலவந்தம்பண்ணப்படுகிறது



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

"யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்" (மத்தேயு 11:12).

•••

எதிராளியாகிய சாத்தான் தேவனுடைய ராஜ்யமாகிய பரலோகத்தின் அருகில் வர தைரியங் கொள்ளமாட்டான். அப்படியானால், வன்முறையை பயன்படுத்தி அதை பலவந்தமாய் எடுத்துக்கொள்ள தைரியங்கொள்பவர்கள் யார்?

இதன் அர்த்தம் தேவனுடைய பிள்ளைகள் எதிராளியான சாத்தானுக்கு விரோதமாக ஆவிக்குரிய யுத்தத்தில் ஜெயம் பெறுவதால் தங்கள் விசுவாசத்தை எந்தளவாய் வளர்த்துக் கொள்கிறார்களோ அந்தளவாய் பரலோக ராஜ்யத்தில் சிறந்த வாசஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியும் என்பதாகும்.

### 1. விசுவாசத்துடன் பரலோகராஜ்யத்தை நீங்கள் பலவந்தமாய் பிடித்துக்கொள்ள முடியும்

யாரெல்லாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்களோ அவர்களெல்லாம் இரட்சிக்கப்பட்டு பரலோகராஜ்யம் போகமுடியும். ஆனால் எதிராளியாகிய பிசாசு ஜனங்கள் சுவிசேஷத்தை விசுவாசியாதபடிக்கு தடைபண்ண முயற்சித்துக் கொண்டே இருப்பான். அவைகள் எப்போதும் ஜனங்களை ஏன் ஏற்கனவே ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்களையும்கூட பாவஞ்செய்யும்படிக்கு வஞ்சிக்கும். இந்த எதிராளியாகிய சாத்தானை தோற்கடிப்பதற்கு நாம், பாவத்திற்கு விரோதமாக இரத்தஞ்சிந்தும்படி போராடி எல்லா வகையான தீமைகளையும் நாம் களைந்துப்போட வேண்டும். நாம் எந்தளவாய் பரிசுத்தமாகுதலை அடையப்பெற்று நம்முடைய கடமைகளை நிறைவேற்றுகிறோமோ அந்தளவாய் நம்முடைய விசுவாசம் வளர்ந்து சிறந்த வாசஸ்தலங்களுக்குள் பிரவேசிக்க முடியும்.

இன்றைய வேதபகுதியில், இயேசுவானவர் "யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம்பண்ணப்படுகிறது; பலவந்தம்பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்" என்று சொன்னார். யோவான்ஸ்நானன் என்பவர் இயேசுவுக்கு வழியை ஆயத்தம்பண்ணினவர். அவர் இயேசுவானவர் தம்முடைய ஊழியத்தை நிறைவேற்றி முடிக்கும்படியாக இயேசுவானவருக்கு சாட்சி கொடுத்தார். ஆகவே, "யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும்" என்பது நாம் விசுவாசத்தின் மூலம் இரட்சிப்பைப் பெறுகிற இயேசுவின் காலத்தையும் புதிய ஏற்பாட்டின் காலத்தையும் அடையாளப்படுத்துகிறது.

"யோவான்ஸ்நானனுக்கு முன்பதாக" என்பது பழைய ஏற்பாட்டின் காலம் அதாவது மக்கள் நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் மூலம் இரட்சிக்கப்பட்ட நியாயப்பிரமாண காலத்தைக் குறிக்கிறது. அவர்கள் நியாயப்பிரமாணங்கள் அனைத்தையும் கைக்கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் நியாயப்பிரமாணத்தை மீறி ஏதாகிலும் பாவங்களை செய்தால், அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற அவர்கள் பாவநிவாரணபலி செலுத்த வேண்டியதாய் இருந்தது. மாறாக, புதிய ஏற்பாடு என்பது பரிசுத்த ஆவியின் காலமாகவும் கிருபையின் காலமாகவும் இருக்கிறது. இதன் காரணம் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிப்பதால் நாம் நம்முடைய பாவங்களிலிருந்து மன்னிக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகவும் பரிசுத்த ஆவியின் வல்லமையின் மூலமாகவும் இரட்சிக்கப்பட முடியும்.

ஆனால் பரிசுத்த ஆவியின் காலத்தை குறித்தும் கிருபையின் காலத்தைக் குறித்தும், அநேக மக்கள் இயேசுவை விசுவாசித்தும் நாம் பாவஞ்செய்து கொண்டிருந்தாலும் மன்னிக்கப்பட்டு இரட்சிக்கப்படுவோம் என்று நினைக்கிறார்கள். இருப்பினும், புதிய ஏற்பாட்டில் நாம் செயலில் பாவஞ்செய்யாவிட்டாலும், இருதயத்தி லுள்ள தீமை பாவமாக கருதப்படுகிறது. நாம் ஒரு சகோதரனை பகைத்தால், கொலை பாதகமான பாவம் செய்கிறோம் (1யோவான் 3:15). ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடு விபச்சாரம் செய்தாயிற்று (மத்தேயு 5:28).

நீங்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் போது, நீங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்பை பெற்று, பரிசுத்த ஆவியை ஈவாக பெறுகிறீர்கள். பின், நீங்கள் மாம்சீக ஆசைகளை பின்பற்றாமல், பரிசுத்த ஆவியை பின்பற்றி செயல்படவேண்டும். கலாத்தியர் 5:19–21, "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை என்று எச்சரிக்கிறது. வேறு வார்த்தையில், அவர்கள் பரலோகம் போக முடியாது. அவர்கள் நரகத்திற்குப் போய்விடுவார்கள். வேதாகமத்தில் இன்னும் பல பகுதிகளில் பாவஞ் செய்கிறவர்களுக்கும் தேவனுக்கும் எந்தவொரு சம்பந்தமுமில்லை என்று எச்சரிக்கிறது. இதன் அர்த்தம் செயல்வடிவமாய் செய்கிற பாவங்களை நாம் களைந்துப்போட வேண்டும் என்பது மட்டுமல்ல, ஆனால் இருதயத்திலிருக்கிற நம் எண்ணங்களிலிருக்கிற இயல்புகளிலிருக்கிற தீமைகளையும்கூட களைந்துப்போட வேண்டும் என்பதாகும்.

அப்படியானால் பழைய ஏற்பாட்டின் காலத்தைவிட புதிய ஏற்பாட்டின் காலத்தில் மக்கள் இரட்சிக்கப்படுவது கடினமா? அப்படியில்லை. பழைய ஏற்பாட்டின் நாட்களில் அவர்கள் தங்கள் சொந்த ஆற்றலாலும் முயற்சியாலும் நியாயப்பிரமாணங்களைக் கைக்கொள்ள வேண்டியிருந்தது, ஆனால் புதிய ஏற்பாட்டின் நாட்களில், நாம் பாவங்களை நம்முடைய சுய பெலத்தால் அல்ல பரிசுத்த ஆவியின் வல்லமையினால் தூக்கி எறிய முடியும். நாம் விசுவாசத்தோடு ஆண்டவரை ஏற்றுக்கொண்டு பரிசுத்த ஆவியின் வல்லமையினால் பாவங்களை தூக்கி எறிய முயற்சிக்கும் போது, நாம் செயல்வடிவில் உள்ள பாவங்களை மட்டுமல்ல ஆனால் நம்முடைய இருதயத்தில் உள்ள பாவ சுபாவங்களையும்கூட அகற்றிவிட முடியும்.

### 2. 'பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்கிறார்கள்' என்பதன் ஆவிக்குரிய அர்த்தம்

'பரலோகராஜ்யத்தை பலவந்தமாய் பிடித்துக் கொள்வது' என்பது சாதாரணமாக பரலோகத்திற்குள் போவதை மட்டும் குறிக்கவில்லை. பரலோகராஜ்யம் பல நிலைகளாக பகுக்கப் பட்டுள்ளது. மேலும் மற்றதைவிட சிறந்த வாசஸ்தலங்கள் உண்டு. அதனால் நாம் அதை வாஞ்சித்து பரலோகராஜ்யத்தை பலவந்தமாய் பிடித்துக்கொள்ள வேண்டும். பரலோக ராஜ்யம் ஆவிக்குரிய பரலோகத்தை சார்ந்தது. அந்த ஆவிக்குரிய பரலோகம் இந்த உலகத்தைவிட வித்தியாசமான பரிமாணத்தைச் சார்ந்தது. ஆவிக்குரிய பரலோகமும்கூட பல வானங்களாக பகுக்கப்பட்டுள்ளது (1 இராஜாக்கள் 8:27; 2நாளாகமம் 2:6; நெகேமியா 9:6).

குறிப்பாக, 2 கொரிந்தியர் 12:2 அப்போஸ்தலனாகிய பவுலின் ஆவி 'மூன்றாம் வானம்' வரை செல்கிறதைக் குறித்து பேசுகிறது. அவர் மூன்றாம் வானத்தை குறித்து சொன்ன காரணத்தால் அங்கே முதல் மற்றும் இரண்டாம் வானம் இருக்க வேண்டும். மூன்றாம் வானத்திற்கு மேலாகவும் வானங்கள் இருக்கக்கூடும். ஆவிக்குரிய மண்டலத்தில் பல வானங்களின் மத்தியில் அப்போஸ்தலனாகிய பவுல் நம்முடைய நித்திய வாசஸ்தலங்கள் உள்ள மூன்றாம் வானத்திற்குச் சென்றான். அப்போஸ்தலனாகிய பவுல் மூன்றாம் வானத்திலுள்ள பரதீசை கண்டான் (2 கொரிந்தியர் 12:4).

இயேசுவானவர் மானுட இரட்சிப்பின் அநாதி திட்டத்தை அடைவதற்கு சிலுவையிலே சற்று மரிக்கும் முன்னர், சிலுவையிலே தொங்கிக் கொண்டிருந்த கள்வன் ஒருவன், "இயேசுவே, உம்முடைய ராஜ்யத்தில் என்னை நினைத்தருளும்" என்றான். பின்பு அவர் அவனை நோக்கி, "இன்றைக்கு நீ என்னோடே கூட பரதீசியிலிருப்பாய் என்று மெய்யாகவே நான் உனக்குச் சொல்கிறேன்" என்றார் (லூக்கா 23:43). அவன் உடனடியாக மரித்ததால் அவன் இரட்சிப்பைப் பெறும் விசுவாசத்தை மட்டுமே உடையவனாய் இருந்தான். அவனால் தேவனுடைய வார்த்தையின்படி வாழ முடியவில்லை. கூடவே அவன் தேவனுடைய ராஜ்யத்திற்காக வேலை செய்யாததால், அவனுக்கு பரலோக ராஜ்யத்தில் வெகுமதிகள் இல்லை. பரதீசு என்பது ஆண்டவரை ஏற்றுக்கொண்டு இரட்சிப்பை கிட்டத்தட்ட பெற்றவர்களுக்கான இடமாகும்.

கூடவே, வெளிப்படுத்தின விசேஷம் அதிகாரம் 21ல், நாம் புதிய எருசலேம் நகரத்தின் பதிவைக் குறித்துப் பார்க்கிறோம். அது பரிசுத்தமும் மகிமையுமான நகரம், பரலோகத்தில் மிகவும் மகிமையான வாசஸ்தலம். அந்த நகரத்தில் தேவனுடைய சிங்காசனம் உள்ளது. இருதய சுத்திகரிப்பை அடையப்பெற்று எல்லா துறையிலும் உண்மையுள்ளவர்களாக மாபெரும் விசுவாசத்தை அடையப்பெற்றவர்களுக்கான வாசஸ்தலமாகவும் இருக்கிறது. இந்த புதிய எருசலேமிற்கும் பரதீசிற்கும் இடையே மற்ற நிலைகளிலுள்ள வாசஸ்தலங்கள் உள்ளன. நீங்கள் எந்தளவாக எதிராளியான சாத்தானை ஜெயித்து, பாவத்திற்கு விரோதமாக இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக போராடி பாவத்தை களைந்துப்போட்டு சத்தியத்தினால் உங்கள் இருதயத்தை நிரப்புகிறீர்களோ, அந்தளவாய் சிறந்த வாசஸ்தலத்திற்குள் செல்ல தகுதியை பெறுவீர்கள்.

இதுதான் "பரலோகராஜ்யத்தை பலவந்தமாய் பிடித்துக்கொள்ளுதலின்" அர்த்தமாகும். இரட்சிக்கப்படுகிறவர்களின் விசுவாசம் கடுகு விதையைப் போல் உள்ளது. ஆனால் அவர்கள் தங்கள் இருதயத்தின் நிலத்திலே விதையை விதைத்து அதைப் பராமரித்து அதை வளர்த்தால், அவர்களது விசுவாசம் பெரிய மரம்போல் வளரும். புயலடித்தாலும் அதற்கு பிரச்சனை இல்லை. பெரிய மரங்களில் பலவகையான பறவைகள் கூடுகட்டி இளைப்பாறுவது போல பெரிய விசுவாசமுள்ளவர்கள் அநேக ஆத்துமாக்களை அரவணைத்துக்கொள்வார்கள் (மத்தேயு 13:31–32). அநேக ஆத்துமாக்களை நீங்கள் இரட்சிப்பின் பாதையில் நடத்தினால் நீங்கள் பரலோகராஜ்யத்தில் மிக அழகான மிக பெரிதான வாசஸ்தலங்களில் வசிப்பீர்கள் (மத்தேயு 5:5).

நீங்கள் மிக அழகான, கவரக்கூடிய, சந்தோஷமான இடத்தைக் கற்பனை செய்தாலும்கூட அதனோடு பரலோகத்தை ஒப்பிட முடியாது. பரலோகத்தில் மிக கீழான வாசஸ்தலமாகிய பரதீசுகூட, இந்த உலகின் மிக அழகான இடத்தைவிட அதிகமதிகமான அழகானதாக இருக்கும். ஆகவே, தேவனுடைய சிங்காசனம் இருக்கிற புதிய எருசலேம் நகரத்தின் மகிழ்ச்சியையும், மகிமையையும் மனிதர்களுடைய வார்த்தைகளால் எவ்வாறு விவரிக்க முடியும்? நீங்கள் பரலோகராஜ்யத்தை குறித்து தெளிவாக அறிந்துகொள்ள ஆரம்பித்தால் நீங்கள் இந்த உலகத்தின் காரியங்கள் அனைத்தும் அர்த்தமற்றவை என்பதை மனதில் வைத்துக்கொள்வீர்கள். நீங்கள் உலக ஆசைகளை அர்த்தமற்ற இச்சைகளை அகற்றி, தேவனுடைய வார்த்தையின்படி உங்களை மாற்றி பரலோகராஜ்யத்தை பலவந்தமாய் பிடித்துக் கொள்ள முயற்சிப்பீர்கள்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, மானுட வேளாண்மையின் முடிவில் பரலோக வாசஸ்தலம் தீர்மானிக்கப்படும். உங்களுக்கு சிறிய விசுவாசமிருந்தாலும், இப்போதிருந்து தொடர்ந்து ஊக்கமாக பரலோக ராஜ்யத்திற்கு நேராக முன்னேறுவீர்களானால் நீங்கள் புதிய எருசலேம்கூட செல்லலாம்.

ஆகவே நீங்கள் நேரத்தை மிச்சப்படுத்தி பரலோக ராஜ்யத்திற்கு நேராக தொடர்ந்து ஊக்கமாக முன்னேறி சிறந்த வாசஸ்தலத்தை பலவந்தமாய் நீங்கள் பிடித்துக்கொள்ளும்படி ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]…" [அப். 17:25]
"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" [அப். 4:12]



# பரிசுத்த ஆவியினால் அருளப்படும் கிருபை

**பரிசுத்த ஆவியானவர் ஆவியாயிருக்கிற தேவனையும் ஆவிக்குரிய மண்டலத்தையும் அறிந்து புரிந்துகொள்ள உதவுவார். அதினால் நாம் இயேசு ஒருவரே நம்முடைய இரட்சகர் என்று விசுவாசித்து அறிக்கைச் செய்ய முடியும் (கலாத்தியர் 4:6; 1 கொரிந்தியர் 12:3).**

**ஜுன் 4, 2017 ஞாயிறு அன்று பெந்தெகொஸ்தே நாள் கொண்டாட்டத்திற்காக, நாம் பரிசுத்த ஆவியினால் அருளப்படும் கிருபைக்குள் மூழ்குவதால் பிதாவாகிய தேவனுக்கு சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துவோம்.**

## நீர்வீழ்ச்சியைப் போல பரிசுத்த ஆவியானவர் கிருபையை ஊற்றுகிறார்

1 கொரிந்தியர் 12ல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, பரிசுத்த ஆவியானவர் பல வகையான ஈவுகளை நமக்குத் தருகிறார். அவைகளில் ஒன்று அந்நிய பாஷைகளை பேசுதல் ஆகும். அந்நிய பாஷைகளில் பேசியவர்கள் ஆவிக்குரிய மகிழ்ச்சியையும் பரலோக சந்தோஷத்தையும் உணர்ந்திருப்பீர்கள். தரிசனங்களின் ஈவோடுகூட, நீங்கள் பரலோகம் அல்லது ஆவிக்குரிய ஜீவராசிகள், தூதர்கள் போன்றவற்றை கண்டிருக்கக்கூடும்.

ஆவியின்நிறைவோடுகூட நாம் தேவனைத் துதிக்கும்போதும் அவரை நோக்கி ஜெபிக்கும்போதும் அவருக்காக ஊழியம் செய்யும்போதும் நாம் தேவனருளிய மகிழ்ச்சியால் நிரப்பப்படுகிறோம்.

மேலும் பரிசுத்த ஆவியின் வல்லமையான கிரியைகள் மூலமாக, நீங்கள் ஆவிக்குரிய உலகத்தை உணரலாம். அதில் கூடாதது ஏதுமில்லை. அது மர்மங்களும் அதிசயங்களுமுள்ளதாய் உள்ளது. அவருடைய கிரியையினாலே, வேதாகமத்தின் நிலை தன்மையை குறித்து உங்களுக்கு நிச்சயமிருக்கும். அதனால் உங்களுக்கு உலகத்தோடு எந்த ஒரு தொடுக்கும் இராது. பரலோ–கத்தின் நம்பிக்கை நிறைந்த சந்தோஷமான வாழ்வை நடத்துவீர்கள்.

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஆழங்களையும்கூட ஆராய்ந்து அறிவார் (1 கொரிந்தியர் 2:10). அதனால் அவர் நாம் தேவனுடைய இரகசியமான அநாதி திட்டங்களை அறிந்துக்கொள்ள செய்து தேவனுடைய இருதயத்தையும் சித்தத்தையும் புரிந்துக்கொள்ள நமக்கு உதவுகிறார். அவருடைய உதவியினால், தேவனுடைய அன்பு எத்தனை பெரியது என்றும் தேவனுடைய நற்குணம் எத்தனை ஆழமானது என்றும் நாம் புரிந்துக்கொள்ள முடிகிறது.

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய அன்பை மட்டுமல்ல அவருடைய நீதியையும்கூட நாம் அறிந்துணரும்படி செய்கிறார். அவர் நாம் இந்த கடினமான உலகில் பேரழிவுகளுக்குள்ளாகாதபடி எவ்வாறு ஆசீர்வாதமான வாழ்வு வாழ முடியும் என்பதை நாம் அறிந்துக்கொள்ள செய்கிறார். பரிசுத்த ஆவியின் மூலமாக, தேவன் கிருபையை ஒரு நீர்வீழ்ச்சியைப்போல ஊற்றுகிறார். நமக்குள் வாழ்கிற பரிசுத்த ஆவியானவர் நமக்கு அபரிதமான கிருபையளிக்கிறார் என்பதற்காக நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

## பரிசுத்த ஆவியானவர் நமக்காக முனங்கி பரிந்து பேசுவார்

பரிசுத்த ஆவியானவர் சத்தியமாய் இருப்பதால் (1 யோவான் 5:7) தேவனுடைய பிள்ளைகள் சத்தியத்தைப் பின்பற்றும்போது, பரிசுத்த ஆவியானவர் பெரிதும் மகிழுவார். பரிசுத்த ஆவியானவர் நம்மில் மகிழும்போது, நம்முடைய இருதயமும்கூட மகிழ்ச்சியால் நிரம்பியிருக்கும். மாறாக, நாம் சத்தியத்திற்குப் புறம்பானவைகளை பின்பற்றினால் பரிசுத்த ஆவியானவர் துக்கத்தோடு முனங்குவார். பரிசுத்த ஆவியானவர் முனங்கும்போது, நம்முடைய இருதயமும்கூட சங்கடத்தை உணரும். இந்த முறையில், நாம் அதை அறிக்கைச் செய்து மனந்திரும்பி சத்தியத்தைப் பின்பற்றினால், சஞ்சலம் நம்மைவிட்டு நீங்கும் சமாதானமும் மகிழ்ச்சியும் நம்மீது வரும்.

நம்முடைய பெலவீனங்களினிமித்தம் நாம் பயங்கரமான பாவத்தை செய்–துவிட்டாலும்கூட, அவர் வாக்குக்கடங்கா பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். அவர் தேவனிடத்தில் தேவன் நம்மை மன்னிக்கும்படிக்கும் பாவங்களிலிருந்து நாம் திரும்புதவற்கு பெலன் தரவேண்டும் என்றும் ஜெபிக்கிறார். நாம் அவருடைய சத்தத்தைக் கேட்காவிட்டால், நாம் மறுபடியும் நம் இதயக்கதவை திறந்து கீழ்ப்படியும்படியாக பரிசுத்த ஆவியானவர் எப்போதும் நம் இதயக் கதவை தட்டிக்கொண்டே இருப்பார்.

பரிசுத்த ஆவியானவர் இந்த தலைமுறை எத்தனை பாவம் நிறைந்தது என்பதையும் முடிவுகாலத்தில் மக்களுடைய இருதயம் எத்தனை பொல்லாததாய் உள்ளது என்பதையும் அறிவார். இதன் காரணமாகவே, அவர் தொடர்ந்து நமக்காக மன்னிப்பை கேட்டு, நாம் அதிக வாய்ப்புகளை பெறும்படியாக நமக்காக ஜெபிக்கிறார். தங்களை தாங்களே கைவிட்டுவிட நினைக்கிற ஆத்துமாக்களைகூட பரிசுத்த ஆவியானவர் விட்டுவிடமாட்டார். அவர் அவர்களுக்காக முனங்கி, அவர்களுக்காக பரிந்துப்பேசுவார்; அவர்களை பிதாவாகிய தேவன் விரும்புகிற பாதையில் சரியாக வழிநடத்துவார்.

உங்களில் பல குறைவுகள் இருந்தாலும்கூட பரலோகத்தில் புதிய எருசலேமிற்கு இன்னமும் உங்களை வழிநடத்த விரும்புகிற பரிசுத்த ஆவியானவரின் அன்பிற்காக நீங்கள் ஆழமான நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

## பரிசுத்த ஆவியானவர் எப்போதும் நம் இருதயத்தை அறிந்து எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் நமக்கு உதவுவார்

பரிசுத்த ஆவியானவர் நம் வாழ்வில் பல வழிகளில் கிரியை செய்கிறார். அதனால் நாம் தேவனுடைய அன்பை உணரமுடிகிறது. பரிசுத்த ஆவியானவர் நம்மை தேற்றுகிறார், நம்மை ஊக்கப்படுத்துகிறார், நமக்கு உதவுகிறார்.

பாடுகளின் நேரத்தில் யாரும் உங்கள் இருதயத்தை அறியாதபோது, நீங்கள் வானில் உள்ள வானவில்லினால் தேற்றுதலை உணருவீர்கள். காரணம் அந்த வானவில் உங்களுக்காக தேவன் உண்டாக்கினார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்கள். சில சமயங்களில் அவர் நம்மை சுற்றியுள்ள மக்கள் மூலமாக நம்மை தேற்றுவார் அல்லது ஊக்கமளிப்பார். சில நேரங்களில் உங்களுக்குத் தேவையானது எதுவோ அதை பிற மக்களிடமிருந்து நீங்கள் பெறுவீர்கள். அல்லது நீங்கள் சில கூடுதலான வருமானத்தைப் பெறுவீர்கள். அதுதான் உங்களுக்கு மிக அவசரமாக தேவைப்பட்ட தொகையாக இருக்கக் கூடும். அப்போது உங்கள் சூழ்நிலைகள் அனைத்தையும் அறிந்த தேவனுடைய தயவு, மென்மை, சாந்தத்தினால் தொடப்படுவீர்கள், உங்களுக்கு கண்ணீர் பொங்கிவரும்.

சில சமயங்களில் செய்திகளில் குறிப்பிட்ட பகுதி விசேஷித்த விதமாக உங்களுக்காக பேசப்பட்டது என்று உணருவீர்கள். நீங்கள் துதிபாடல் பாடும்போது, குறிப்பிட்ட பாட்டு வரிகள் உங்கள் இருதயத்தை ஆழமாக தொடும். உங்கள் ஜெபங்களில், பரிசுத்த ஆவியானவர் அந்த வார்த்தைகளை உங்கள் உதடுகளில் வைத்ததுபோல அத்தியாவசிய தேவைகளுக்காக நீங்கள் ஜெபிக்கலாம். ஜெபக்கூட்டங்களில் ஆவியின் நிறைவோடிருக்கிற சில தலைவர்கள் அல்லது போதகர்கள் உங்களுக்காக பரிந்துப்பேசி ஜெபிக்கும்போது, அவர்கள் உங்கள் மனதை அப்படியே வாசிப்பார்கள். உங்கள் இருதயத்தில் உள்ளதுபோலவே ஜெபிப்பார்கள்.

அப்போது நீங்கள், “பிதாவாகிய தேவன் என் இருதயம் அனைத்தையும் அறிவார். என்னால் செய்ய முடியும் என அவர் உற்சாகப்படுத்துகிறார். அவர் நான் புதிய எருசலேமிற்குள் வரவேண்டும் என அழைக்கிறார்” என்று நினைத்து ஆழமான அன்பை உணரமுடியும். இவையனைத்தும் நம்முடைய இருதயத்தை அறிந்து புரிந்துள்ள பரிசுத்த ஆவியானவரின் கரங்களே. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வார்த்தைகளையும் செயல்களையும் மட்டுமல்ல, பிறர் அறியாத நம்முடைய இருதயத்தின் ஆழங்களையும் சூழ்நிலை–லகளையும் அறிவார்.

பிதாவாகிய தேவனுடைய கண்களோடு உங்களைப் பார்க்கிற, பிதாவாகிய தேவனுடைய இருதயத்தோடு உங்களை தாங்குகிற ஒருவர் இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர்தான் பரிசுத்த ஆவியானவர். இந்த பரிசுத்த ஆவியானவரை அங்கீகரித்து அவரை சார்ந்துகொண்டு, புதிய எருசலேமை நோக்கி அதிவேகமாக முன்னேறுங்கள்.

# “உங்கள் மூளை பரிசோதனை சாத்தியமே இல்லை என்று காண்பித்தது, ஆனால் இப்போது நீங்கள் இயல்பாக இருக்கிறீர்கள்!”



**சகோதரர் செங்வோ லீ, வயது 56, 10வது மாகாணம், மான்மின் தலைமை சபை**
தன் மனைவி கண்காணியாள் ஜியோங்ஹி ஜியங், மகள், பேத்தி மற்றும் மருமகனுடன்

என் மனைவியின் வேண்டுகோளுக்கிணங்க நான் ஆராதனையில் பங்குப்பெற்று வந்தபோதிலும் என்னிடத்தில் உண்மையான விசுவாசம் காணப்படவில்லை. கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படையான காரியங்களை கொண்டுள்ள தலைமை போதகரின் சிலுவையின் செய்தி என்ற புத்தகத்தை கட்டாயம் வாசிக்க வேண்டும் என்று அநேக முறை கேட்டிருந்தபோதும் நான் வாசிக்கவில்லை. 2017 ஏப்ரல் மாதத்தின் ஆரம்பத்தில் அந்தப் புத்தகத்தை வாசித்து கொண்டிருந்தபொழுது நான் ஒருபோதும் எதிர்பார்த்திராத மிகப்பெரிய மாற்றத்தை அனுபவித்தேன்.

அந்தப் புத்தகத்தில், இயேசுவின் சிலுவை மரணத்தினால் எப்படி என் பாவங்களிலிருந்து மன்னிக்கப்பட்டு இரட்சிக்கப்பட முடியும், ஏன் பாவத்தினால் வியாதிகள் வருகின்றன, எதற்காக நான் திருச்சபைக்குச் செல்ல வேண்டும் போன்றவைகளை உணர்ந்தேன். இப்படிப்பட்ட கேள்விகளை வேறு எந்த கிறிஸ்தவ புத்தகங்களும் தெளிவாக விளக்கிட முடியாது. நான் நடுராத்திரி வரை விழித்திருந்து மூன்று முறை சிலுவையின் செய்தி புத்தகத்தை வாசித்தேன். நான் இதுவரைக்கும் ஒரு தவறான பாதையில் என் வாழ்க்கையை வாழ்ந்து வந்ததை அறிந்துகொண்டேன். பிறருடைய ஆசைக்காக என்றில்லாமல், என் சொந்த விருப்பத்தின்படி தேவனை விசுவாசிக்க முடிவு செய்தேன்.

ஏப்ரல் 8 சனிக்கிழமை அன்று காலையில் எனக்கு குமட்டல் வந்து, தலைவலியும் உண்டானது. ஏதோ அஜீரண கோளாறால் இப்படியாகிறது என்று நினைத்தேன், ஆனால் மாலையில் மிகவும் மோசமானது. கடுமையான தலைவலியின்நிமித்தம் என்னால் தூங்கக்கூட முடியவில்லை. கழிவறைக்குச் சென்றபொழுது எனக்கு மயக்கம் வந்ததால், சுவரை பிடித்துக்கொண்டுதான் நடந்தேன்.


ஏப்ரல் 9 அன்று ஞாயிறு காலை ஆராதனையில் நான் சபைக்கு தள்ளாடினவனாய் போய் சேர்ந்தேன். என் சரீரம் இடது பக்கமாய் முறுக்கிவிட்டதைப்போன்று திரும்பிவிட்டது. என் மனைவி மருத்துவமனைக்குப் போகும்படி என்னிடம் சொன்னாள், நானோ தேவனைச் சார்ந்துகொள்ள விரும்பினேன். எப்படியோ நான் சபைக்குச்சென்றபொழுது படுத்துக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது. மக்கள் அது பக்கவாதமாக இருக்கலாம் என்று சொல்லி தலைமை போதகரின் ஜெபத்தைப் பெறும்படி என்னை கூட்டிச்சென்றார்கள். அவர் என் தலைமேல் கைகளை வைத்து ஊக்கமாக எனக்காக ஜெபித்தார்.

ஏப்ரல் 10 அன்று காலையில், நான் குமட்டலாக உணர்ந்து, வாந்தி எடுத்ததால் ஒரு மருத்துவரை பார்க்கச் சென்றேன். அவர் என்னுடைய மூளை இரத்த கசிவினால் சிறுமூளை சேதமடைந்துவிட்டது, அதனால் பின்விளைவுகள் உண்டாகலாம் என்றார். அவர் சொன்னதின் அர்த்தம் மனித சரீரத்தின் ஆற்றலை கட்டுப்படுத்துவதில் இந்த சிறுமூளை ஒரு முக்கியமான பங்கை வகிப்பதால், எனக்கு பக்கவாதம் ஏற்படலாம் என்றார். நான் அவசர சிகிச்சை பிரிவிற்கு கொண்டுச்செல்லப்பட்டேன். மருத்துவர் என் பரிசோதனை முடிவை பார்த்தபிறகு என்னிடம் சொன்னார், “உங்கள் மூளை பரிசோதனையின்படி நீங்கள் தெளிவான மனநிலையோடு பேசிக் கொண்டிருப்பது சாத்தியமே இல்லை. ஆனால் நீங்கள் பேசுகிறீர்கள் இயல்பாக இருக்கிறீர்கள். இது உண்மையிலேயே ஒரு ஆச்சரியம்தான்.” அவர் என்னிடம் திரும்ப திரும்ப ஏதாவது பிரச்சனையை உணருகின்றீர்களா என கேட்டுக்கொண்டே என கேட்டுக் கொண்டே இருந்தார். என் கை கால்களில் பெலனை இழந்து, மரத்துப்போனதைப் போல நான் உணர்ந்தபோதிலும் நான் நன்றாகவே இருக்கிறேன் என்று அவரிடம் சொன்னேன். அவரோ என்ன விநோதமோ என்று நினைத்தார். இரண்டு நாளைக்குப் பிறகு தலைவலி இல்லை. நான் புதுப்பிக்கப்பட்டு நடக்க துவங்கினேன்.

நோயாளி அறையில் அமர்ந்து மறுபடியும் சிலுவையின் செய்தி புத்தகத்தை நான் வாசித்தபொழுது அது என் இருதயத்தின் ஆழத்தை தொட்டது. என் இருதயத்தில் அதிகமாய் கண்ணீர் சிந்தினேன். தேவனுடைய கிருபையால் மறுபடியும் பிறந்த எனக்கே ஒவ்வொரு வரிகளும் கொடுக்கப்பட்டது என்று உணர்ந்தேன். அதனால் முக்கியமான பகுதிகளை புரிந்துகொண்டு அவைகளை அடிக்கோடிட்டு, இருதயத்தில் வைத்துக்கொண்டேன். முன்பு தேவனுடைய அன்பை அறியாமல் என் இஷ்டப்படி வாழ்ந்ததைக் குறித்து வருத்தமடைந்தேன். தம்முடைய வல்லமையான ஜெபத்தினால் என் ஆத்துமாவை புதுப்பித்த தலைமை போதகர்பேரில் நன்றியை உணர்ந்தேன்.

நான்காவது நாளில் நான் நன்றாக உணர்ந்ததால் மருத்துவமனையிலிருந்து போக நினைத்தேன். ஆனால் மருத்துவரோ, “அது மோசமானதாக இருக்கலாம். உங்கள் நிலைமையை நாங்கள் இன்னும் பரிசோதிக்கவேண்டும்” என்று சொல்லி என்னைப் போக அனுமதிக்கவில்லை. பிறகு நான் புறநோயாளிகள் பிரிவிற்கு மாற்றப்பட்டேன். நடப்பது, சாப்பிடுவது மற்றும் பேசுவதில் எனக்கு எவ்வித பிரச்சனையும் உண்டாகவில்லை. என் மருத்துவர் இப்படிப்பட்ட சூழ்நிலையை பார்ப்பது இதுவே முதல் முறை என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார். நான் மே 2 அன்று மருத்துவமனையிலிருந்து வந்தேன். நான் வழக்கம்போல வேலை செய்தேன். நான் வேலை செய்தேன், நடந்தேன் மற்றும் உடற்பயிற்சி செய்தேன். நான் மிகவும் நன்றாக உணர்ந்தேன், ஆரோக் கியமாக உள்ளேன்.

தலைமை போதகரின் ஜெபம் இல்லாவிட்டால், சிறுமூளை பாதிப்படைந்து வாழ்நாள் முழுவதும் ஊனத்தோடு இருந்திருப்பேன். எவ்வித பின்விளைவுகளும் இல்லாமல் ஒரு சுகமான வாழ்க்கையை வாழ்வதைக் குறித்து நான் நன்றியுள்ளத்தோடு இருக்கிறேன். நான் சகல நன்றிகளையும், மகிமையையும் தேவனுக்கே செலுத்துகிறேன்.



எம்ஆர்ஐ: சிறுமூளையில் ஏற்பட்ட இரத்தக்கசிவு



சகோதரர் செங்வோ லீ உடற்பயிற்சி செய்கிறார்

# “நான் சர்க்கரை வியாதி, உயர்இரத்த அழுத்தத்திலிருந்து சுகமானேன்”

**கண்காணியாள் தெல்மா டங்யக், வயது 70, செபு மான்மின் சபை, பிலிப்பைன்ஸ்**



நான் கடந்த பத்து ஆண்டுகளாக சர்க்கரை வியாதியினாலும் உயர் இரத்த அழுத்தத்தினாலும் பாதிக்கப்பட்டு வந்தேன். நான் சிலசமயங்களில் நிலை குலைந்துவிடுவேன். என் கால்களும் வீங்கிவிடும். என் வாழ்க்கை சுலபமாக காணப்படவில்லை. 2011 ஆகஸ்டு மாதத்தில் என் பேரன் இம்மானுவேல் ஜாப்ரா (புகைப்படத்தில் இடது பக்கம்) என்னை செபு மான்மின் சபைக்கு அழைத்துச் சென்றான்.

எப்பொழுதும் குடித்துக் கொண்டும் கணினி கேம்ஸ் விளையாடிக் கொண்டும் தன் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருந்த அவன் திடீரென்று அந்த சபைக்கு போக ஆரம்பித்ததால் அவனுடைய வாழ்க்கை முற்றிலும் மாறியது. நானும் சபைக்குப் போக ஆரம்பித்ததால், என் வாழ்க்கையும்கூட மாறிவிட்டது. சபையில் சமாதானத்தை உணர்ந்தேன், என் கவலைகள் எல்லாம் போய்விட்டது.

GCNனில் கேட்கும் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் பிரசங்கங்களினால் நான் மிகுந்த கிருபையை பெற்றுக்கொண்டேன். அவருடைய வல்லமையான கிரியைகளால் நான் பிரமித்துப்போனேன். நான் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவும், ஜெபிக்கவும் துவங்கினேன். 2014 பிப்ரவரி 7ல், தானியேல் ஜெபக் கூட்டத்தின் வேளையில் உயர் இரத்த அழுத்தத்தினால் நடுங்கிப்போன நான் முடிவில் சுயநினைவை இழந்துப் போனேன். அது ஒரு மோசமான நேரம். ஆனால் போதகர் ரோசட்டா சங் வல்லமையின் கைக்குட்டையை (அப். 19:11–12) வைத்து எனக்காக ஜெபித்தார்கள். என்மீது மூவான் மதுர தண்ணீரை (யாத்திராகமம் 15:25) தெளித்தார்கள். அதன்பின்பு உடனடியாக நினைவுதிரும்பி இயல்பு நிலைக்குள் வந்தேன்.

2016 ஜூன் மாதத்தில், என் காலில் அடிப்பட்டு விட்டதால், காயம் உண்டாகி சீழ் வடிந்தது. என்னுடைய கால் சீக்கிரமே வீங்கத்தொடங்கியது. நான் நன்றாக நடக்கவோ தூங்கவோ முடியாத அளவிற்கு அதிக வலியை அது உண்டாக்கியது. தட்பவெட்பமும் அனலும் வெப்பமுமாக இருந்ததால் பூச்சிகள் காயப்பட்ட பகுதிகளை சுற்றிக் கொண்டிருந்தது. அதனால் நான் ஒரு கட்டு போட்டுக் கொண்டேன். சர்க்கரை வியாதியின்நிமித்தம் காயப்பட்ட பகுதி சரியாகவில்லை. சீழ் வழிந்து கொண்டே இருந்ததால் கட்டு ஈரமாகிவிட்டது.

நான் பிறரை புரிந்துகொள்ளாமல் அவர்களை நியாயந்தீர்த்து, அவர்களோடு சண்டை போட்டதை நினைத்து மனந்திரும்பினேன். நான் மிகவும் அசௌகரிகமாக உணர்ந்தேன். தலைமை போதகரின் ஜெபத்தைப் பெறும்படிக்கு தென் கொரியாவிலுள்ள மான்மின் தலைமை சபைக்கு ஒரு ஜெப விண்ணப்பத்தை அனுப்பினேன். அக்டோபர் 2 அன்று, விசுவாசத்தோடு ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். அதன்பின்பு அந்தக் காயப்பட்ட பகுதி காய்ந்துப்போய் வலி மறைந்துப்போய்விட்டது. நான் நன்றாக நடக்கவும் தூங்கவும் முடிந்தது. மேலும் நான் சர்க்கரை வியாதி மற்றும் உயர் இரத்த அழுத்தத்திலிருந்தும் சுகத்தைப் பெற்றுக்கொண்டேன். இப்பொழுது நான் மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறேன். அல்லேலூயா!

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com